மாஜிட்ரேட் கோர்ட்டையும், மாவட்ட முன்சிப் கோர்ட்டையும் ஒரேயிடத்தில் வைப்பதற்கான செயற்குறிப்பை வருகிற ஆண்டிலாவது அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக வழக்கறிஞர் சங்கம், நீதி மன்றங்கள் ஒரேயிடத்தில் இருந்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும், பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற கோரிக்கையைக் கொடுத்து வருகிறார்கள். எங்கெங்கு செயல்படுத்த முடியுமோ, அங்கு செயல்பட வைத்தது. பண வசதிக்கு ஏற்றவாறுதான் கோரிக்கைகளை ஏற்க முடியும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, நன்னிலம் தாலுக்காவிலிருந்து திருவாரூருக்கு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, நன்னிலத்திலே அப்படி ஆரம்பிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் வந்தனவா? அது சம்பந்தமாக என்ன பரிசிலனை செய்தார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னரே இதைப்பற்றி பரிசீலிக்கப்பட்ட பொழுது அரசாங்கம் இதைத் தள்ளுபடி செய்திருக்கிறது.

கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே இந்த நன்னிலம், தாலுக்கா தலைநகரம். மேலும் ஏற்கெனவே, இங்கு சப்-மாஜிஸ்ட்டிரேட் கோர்ட் இருந்திருக்கிறது. ஏற்கெனவே, பழைய சர்க்கார் நிராகரித்த காரணத்தால், இந்த அரசாங்கமாவது அதை அனுதாபத்தோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நன்னிலத்திற்கும், திருவாரூருக்கும் பல பிரச்சினைகள் இருந்திருக்கின்றன. ஆனால் அன்றைக்கு திருவாரூரில் மட்டும் போதும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். மறுபடியும் உயர்நீதிமன்றம் நன்னிலத்தில் வைத்தாலும் வேலை இருக்கும் என்ற புள்ளி விவரங்களைத் தருவார்களானால், அதைப்பற்றிப் பரிசிலிக்கலாம்.

அரசுப் பேருந்துகளுக்கான டயர்கள்.

* 423 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சர்க்கார் பஸ்களின் டயர்களைப் புதுப்பிக்கச் செய்ய Retread எந்தெந்த கம்பெனிகளிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறையின் பேருந்துகளின் டயர்களை புதுப்பிக்க தனியார் கம்பெனிகளிடம் கொடுக்கப்படுவதில்லை. டயர்கள் புதுப்பிக்கும் வேலை போக்குவரத்துத் துறையிலேயே செய்யப்படுகிறது.

* 424 வினு.—**திரு. கொளத்தூர் கோதண்டம்** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துத் துறையில் பல உந்து வண்டிகள் டயர்கள் இல்லாத காரணத்தால் அடிக்கடி நின்று போவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?